1973 நவம்பர் 21]

பிரிவுகளைக் குறைத்துக்கொண்டு வந்திருக்கிறோம். ஏற்கனவே இரண்டு இரண்டு செக்ஷன் என்றிருந்தது. இப்பொழுது ஒரு செக்ஷன் என்று வருகிறது. 40 மாணவர்கள் சேர்க்கப்பட்ட இடத்தில் இப்பொழுது 30 மாணவர்களைச் சேர்க்கிறார்கள். ஒரு சமயத்தில் மாணவர்களைச் சேர்க்காத நிலையும் இருந்தது. ஆனால் இந்த ஆண்டு எல்லாப் பயிற்சிப் பள்ளிகளுக்கும் ஒரு பிரிவு தரப் பட்டு, 30 பேர்களைத்தான் சேர்க்க வேண்டுமென்று சொல்லி ஆறாயிரத்து சில்லறை, ஏழாயிரத்துச் சில்லறை பேர் பயிற்சி பெற்ற இடத்தில் இப்பொழுது 3,000 பேர்களைத்தான் சேர்க்க வேண்டுமென்ற நிலை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஐந்தாறு ஆண்டுகளில் நிலைமை எப்படியிருக்கும் என்று தெரியாத காரணத் தினால் ஓரளவு குறைவானவர்களுக்குப் பயிற்சி தரப்படுகிறது.

Technical High Schools

* 254 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) the places where Technical High Schools are located at present; and

(*b*) the number of students taken in them for the year 1972–73?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) & (இ) விரி வான அறிக்கையொன்று @ அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், இந்த விவர அறிக்கையில் ஒவ்வொரு பள்ளியிலும் 60 பேராவது குறைந்தது இருக்க வேண்டு மென்று இருந்தும்கூட, கோயம்புத்தூர், நாகர்கோவில், தூத்துக்குடி, காரைக்குடி, குடியாத்தம் போன்ற இடங்களில் 60-க்கும் மிக மிகக் குறைவாக சேர்க்கப்பட்டிருக்கிறதே, அதற்கு ஏதேனும் விசேஷ காரணங்கள் உண்டா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, விண்ணப்பம் செய்தவர்களின் எண்ணிக்கை குறைந்திருப்பதால் குறைந்திருக்கிறது. ஆனால் அதிகமாக விண்ணப்பங்கள் வந்தால் 60 பேர்கள் வரையில் சேர்ப்பதற்கு வாய்ப்பிருக்கிறது.

@ 432-ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.